ICAR- மத்திய உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிறுவனம்
பராக்பூர், கொல்கத்தா -700120

# கோவிட் 19 தொற்று சூழலில் நதி, கழிமுகம், கால்வாய் மற்றும் சிற்றோடைகளை சார்ந்த மீனவர்களுக்கான ஆலோசனைகள்

பல மாநிலங்களில் கோவிட் 19 தடையிலிருந்து மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்புக்கான நடவடிக்கைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளன. மீன்கள் எளிதில் கெடும் தன்மை கொண்டதாக இருப்பதால், மீன் சந்தைகளின் இயக்கம் தவிர்க்க முடியாதது. இருப்பினும், கொரோன நோய் தொற்றை தடுக்க மீனவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும். சமூக விலகல், சோப்புடன் கைகளைக் கழுவுதல், முககவசம், பாதுகாப்பு உடைகள் அணிதல், மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்ககளை சுத்தம் செய்வது மூலம் தனிநபர் சுகாதாரத்தைப் பேணுவதோடு நோய் பரவலையும் தடுக்கலாம்

**மீனவர்கள் மற்றும் மீனவ கூட்டுறவு சங்கங்கள் பின்பற்ற வேண்டிய ஆலோசனைகள்**

மீன்பிடி நடவடிக்கைக்கு முன்னும் பின்னும் தனிநபர் சுகாதாரம் மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும்.





மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்கள் எப்போதும் முககவசம் அணிய வேண்டும். குறிப்பிட்ட இடைவெளியில் சோப்பு உபயோகித்து கைகளை நன்கு கழுவ வேண்டும்

உள்நாட்டு மீன்வளத்துறையில் மீன்பிடித் தொழில் பெரும்பாலும் குழுக்களாக செயல்டுகிறது. எனவே, மீன்பிடிக்கும் பொழுதும், வலைகள் மற்றும் படகுகள் பயன்படுத்தும் பொழுதும், மீனவர்கள் குறைந்தது 3 அடி தூர இடைவெளியை கடைப்பிடிக்கவேண்டும். நாட்டு படகுகளில் மீன்பிடிக்க 2 நபர்கள் மட்டுமே செல்ல வேண்டும். இரண்டு படகுகளுக்கு இடையே 3 மீட்டருக்கு மேல் தூரத்தை கடைப்பிடிக்கவேண்டும்.




மீன்பிடிதளங்களில் ஓய்வின் போதும், உணவு எடுத்துக் கொள்ளும் நேரத்திலும் மற்றும் மீன்கள் கையாளும் நேரத்திலும், 3-4 அடி தூரத்தை மீனவர்கள் கடைப்பிடிக்கவேண்டும்.







மீன்பிடி வலைகள், படகுகள் மற்றும் பிற மீன்பிடி உபகரணங்கள், ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் பின்னர் சோப்பு கரைசலில் கழுவிய பின் 1% சோடியம் ஹைட்ரோகுளோரைடு கரைசலில் 5 நிமிடங்களுக்கு ஊற வைத்து, பின்னர் சூரிய வலைகளை வேப்ப இலை கரைசலில் ஊறவைத்து சூரிய ஒளியில் உலர்த்தி சுத்தம் செய்யலாம். கூட்டம் கூடுவதை அனுமதிக்ககூடாது. அவ்வப்போது கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யவேண்டும்.




மீன்பிடி துறைமுகங்கள், ப்ளீச்சிங் பவுடர் மற்றும் சோடியம் ஹைபோகுளோரைட் கரைசல் கொண்டு குறிப்பிட்ட இடைவேளையில் சுத்தப்படுத்தப்படலாம்.




மீன் ஏலக்கூடங்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே செயல்படவேண்டும். ஏலம் எடுப்பவர்கள் குறிப்பிட்ட இடைவெளிவிட்டு நிற்கவேண்டும். மேலும் ஏலக்கூடங்களில் கொரோனா நோய் தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகளை மீனவர் சங்கங்கள் ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்.




செயல்பாடு முடக்கப்பட்ட காலத்தில் (lockdown period) மீனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் யாரேனும் வெளிமாநிலங்களில் அல்லது வெளிநாடுகளில் இருந்து வந்திருந்தால், வீடுகளில் 14 நாட்கள் தனிமைப்படுத்தபட வேண்டும். குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களை அவர்களுடன் பழக அனுமதிக்கக்கூடாது.

*மேலும் விபரங்களுக்கு,*

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*

**இயக்குனர்**, ICAR-CIFRI,

பராக்பூர் -700120.